
ΕΝΡΙΚΟΣ
IHS
BL. HENRY SUSO

## *முத்திப் பேறு பெற்ற ஹென்ரி சூசோ (1295 – 1366)*

இவர் 13-ஆம் வயதில் சந்நியாசியானார். வேத சாஸ்திரம் கற்றபிறகு வேதம் போதிக்கத் தொடங்கினார். அதில் புகழ் பெற்றார். தனி நபர்களை புண்ணிய பாதையில் நடத்துவதில் இவர் சிறந்து விளங்கினார். பல நாடுகளில் இருந்தும் இவரைத் தேடி மக்கள் வருவார்கள். இவர் தவவாழ்வு நடத்தினார். பொறுமைசாலி நோயையும் பிறரால் வந்த உபத்திரவங்களையும் தம்மீது சுமத்தப்பட்ட அபாண்டங்களையும் அபூர்வ பொறுமையுடன் சகித்தார். “கடவுள் நல்லவர்; என் மீது மிகுந்த அன்பு காட்டியிருக்கிறார்” என்று இவர் அடிக்கடி சொல்வார் பாடுபட்ட இயேசுவையும் தேவதாயையும் இவர் மிக நேசித்தார். “வேதனையானது மனிதனை எனது சமூகத்தில் அன்புக்குரியவனாக்குகிறது. ஏனெனில் வேதனைப்படும் மனிதன் என்னை ஒத்திருக்கிறான். வேதனையானது நிச்சயமான வழி குறுக்குப்பாதை. அழிந்து போகும் உடலை அது அடக்கி ஒடுக்குகிறது. நித்தியத்தை நினைத்து வாழும் ஆன்மாவுக்கு உணவு ஊட்டுகிறது” என ஒரு நாள் நம் ஆண்டவர் இவரிடம் கூறினார். “உலக மக்கள்” உலகத்துக்கு பிரியப்படும்படி தங்களையே பரித்தியாகம் செய்து நரகத்தை விலைக்கு வாங்குகிறார்கள்” என்றும் “வெதுவெதுப்பான ஆன்மாக்கள் சாவான பாவத்தை மாத்திரமே விலகி நடக்கத் தேடுகிறார்கள். இவர்கள் தாங்கள் நினைப்பதை விட அதிக ஆபத்தான பாதையில் நடக்கிறார்கள்” என்றும் இவர் அடிக்கடி சொல்வார்.

**சிந்தனை:**

சாவான பாவத்தை மாத்திரமல்ல. ஆனால், அற்பப் பாவத்தையும் விலகி நடக்க உறுதி செய்ய வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே நாங்கள் அற்பப்பாவத்தையும் விலக்கி நடக்க உதவி செய்யும்.